(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 81.]

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 யூலை 26, வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

சமுகமளித்தோர்:

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன், குழுக்களின் பிரதித் தவிசாளர்

கௌரவ ஜோன் அமரதுங்க, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கயந்த கருணாதிலக்க, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

கௌரவ ரவி கருணாநாயக்க, மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அகில விராஜ் காரியவசம், கல்வி அமைச்சர்

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார, பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ சாகல ரத்நாயக்க, துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அர்ஜுன ரணதுங்க, போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க, மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ மலிக் சமரவிக்ரம, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

கௌரவ மங்கள சமரவீர, நிதி அமைச்சர்

கௌரவ பி. ஹரிசன், கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர்

கௌரவ அஜித் பி. பெரேரா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன், அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ சுஜீவ சேனசிங்க, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

கௌரவ அசோக் அபேசிங்க, போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த அலுவிஹாரே, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ லக்கி ஜயவர்தன, நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ நிரோஷன் பெரேரா, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன், கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ இரான் விக்கிரமரத்ன, நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ திலிப் வெதஆரச்சி, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த சேனாநாயக்க, வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ கருணாரத்ன பரணவிதான, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன

கௌரவ மஹிந்த அமரவீர

கௌரவ லஸந்த அலகியவன்ன

கௌரவ ஆனந்த அலுத்கமகே

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ பியசேன கமகே

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர

கௌரவ எஸ். எம். சந்திரசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மலித் ஜயதிலக

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மஹிந்த சமரசிங்க

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்

கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன

கௌரவ லக்ஷ்மன் செனெவிரத்ன

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்

கௌரவ கனக ஹேரத்

கௌரவ ஏ. எச். எம். பௌஸி

கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

திரு. நீல் இத்தவல, பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. சபாநாயகரின் அறிவித்தல்கள் : பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்,—

"அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையின் பிரகாரம் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'அரச காணி (விசேட ஏற்பாடுகள்)' எனும் சட்டமூலம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 123 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 120 ஆம் உறுப்புரையின் பிரகாரம், குறிப்பிட்ட சட்டமூலம் மாகாண சபைகளின் விடய நிரலுக்கு உட்பட்டதாக இருப்பதால் அரசியலமைப்பின் 154எ(3) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படுவதற்கு முன்னர் மாகாண சபைகளின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக அதிமேதகு சனாதிபதியினால் ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டாலன்றி அது சட்டமாக ஆக்கப்பட முடியாது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அரசியலமைப்பின் 154எ(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்பட்டிருப்பதால், நீதிமன்றம் இத்தருணத்தில் இச் சட்டமூலம் தொடர்பில் எழுப்பியுள்ள ஏனைய சட்டக் காரணங்களினால் தீர்ப்பொன்றை வழங்குவதில்லை என உயர் நீதிமன்றம் மேலும் கருத்துரைத்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்: (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் -

(i) 2015 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XIV ஆம் பகுதியையும்;

(ii) 2016 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XXVI ஆம் பகுதியையும் ஆறாவது தொகுதியின் XVIII ஆம் பகுதியையும்;

(iii) 2017 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XV, XVI, XVII, XVIII, XIX, XX, XXI, XXII, XXIII, XXIV மற்றும் XXV ஆம் பகுதிகளையும், நான்காம் தொகுதியின் V ஆம் பகுதியையும், ஐந்தாம் தொகுதியின் IX ஆம் பகுதியையும், ஆறாவது தொகுதியின் I, II, III, IV, V, VI, VII மற்றும் VIII ஆம் பகுதிகளையும்; மற்றும்

(iv) 2018 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் எட்டாவது தொகுதியின் II ஆம் பகுதியையும், பத்தாவது தொகுதியின் VIII, IX, XI மற்றும் XII ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் ***அச்சிடப்பட*** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான சனாதிபதி நிதியம் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான மில்கோ (தனியார்) நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் செஸ் வரி தொடர்பில்

ஆக்கப்பட்டு, 2019 ஏப்ரல் 4 ஆம் திகதிய 2117/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து அக்கட்டளை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய வடிவமைப்பு நிலையத்தின் ஆண்டறிக்கையையும் கணக்குக் கூற்றினையும் சமர்ப்பித்து அவ்வறிக்கை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:

(1) (i) நுகேகொட, பெப்பிலியான வீதி, இல. 32/ஏ யில் வதியும் திரு. பி.எஃப். பொன்சேக்காவினது 2019.02.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) தெஹிவளை, பிரதிபிம்பாராம வீதி, இல. 79/51 இல் வதியும் திரு. பி.ஆர்.எல். பீரிஸினது 2019.02.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) புஸ்ஸெலிதென்ன, ஜயகடுவ எனும் முகவரியில் வதியும் திரு. எஸ்.டப்ளியூ. குமாரசிங்கவினது 2019.05.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல சமர்ப்பித்தார்.

(2) பதியபெலெல்ல, லதுபிட்ட, “ஆசிரி” எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.எம்.எல்.டப்ளியூ. அநுருத்த லபுதலவினது 2019.02.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கே.கே. பியதாஸ சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் 30 (10) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

4. பாராளுமன்ற அமர்வுகள் (இல.1): பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2019 யூலை 31 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 2019 ஆகஸ்ட் 01 திகதி வியாழக்கிழமை ஆகிய தினங்கள் சபை அமர்வு தினங்களாக இருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2): பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2019 யூலை 31 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 2019 ஆகஸ்ட் 01 திகதி வியாழக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3): பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2019 யூலை 31 ஆம் திகதி, புதன்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7. ஒத்திவைப்பு (தேசிய ஒருமைப்பாட்டுடன் கூடிய புதிய அரசியலமைப்பு): ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை மேலும் தொடருவதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது, அதற்குரிய விடயம் (2019 யூலை 25).

பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ தாரக்க பாலசூரிய தலைமை தாங்குவாராக" என கௌரவ ரஊப் ஹகீம் முன்மொழிய கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.31 மணிக்கு கௌரவ தாரக்க பாலசூரிய தலைமை தாங்கினார்.)

"கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்குவாராக" என கௌரவ சிறிபால கமலத் முன்மொழிய கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன் வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.05 மணிக்கு கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் பி.ப. 5.25 மணிக்கு, அதன் இன்றைய தினச் சபைத் தீர்மானத்திற்கிணங்க, 2019 யூலை 31 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.30 வரை ஒத்திவைக்கப்பட்டது.